**செ. கு. எண்: 007** **நாள்: 16.01.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 16.1.2019

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து 12.1.2019 அன்று இராமேஸ்வரம் பகுதியைச் சார்ந்த ஒன்பது மீனவர்கள், இரு படகுகளில் அவர்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றனர். 13.1.2019 அன்று அதிகாலை மீன் பிடி பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் விரட்டியதில், இரு படகுகளும் கவிழ்ந்தது. இந்த விபத்துக்குப் பின்னர் எட்டு மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த விபத்தில் திரு. கருப்பையா என்பவரின் மகன் திரு. முனியசாமி என்பவர் துரதிஷ்டவசமாக கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்காக அவர்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்லும் போது, இலங்கை கடற்படையினர், அவர்களது படகுகளை விரட்டி அடிப்பதையும், வலைகளை சேதப்படுத்துவதையும், படகுகளை கைப்பற்றுவதையும் நான்

அவ்வப்போது சுட்டிக் காட்டி, துரித நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளேன். தற்போது நிகழ்ந்துள்ள இந்த சம்பவத்திற்கும் என்னுடைய கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

படகு கவிழ்ந்து அகால மரணமடைந்த திரு. முனியசாமி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. முனியசாமி அவர்களின் குடும்பத்திற்கு **ஐந்து லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**